# முன்னுரை

உலக மரபுச் செல்வங்களைப் பாதுகாக்க வேண்டி ஐக்கிய நாடுகள் அமைப்பின் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்கள் *19* முதல் *25* வரையிலான உலக மரபு வாரமாகக் கொண்டாட ஏற்பாடு செய்து வருகின்றது. உலக மரபு வாரம் *1988*-ஆம் ஆண்டு முதல் கொண்டாப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இந்தியாவில் நடுவணரசு தொல்லியல் துறையும், தமிழகத் தொல்லியல் துறையும் உலக மரபு வார விழாவினை தொடர்ந்து கொண்டாடி வருகின்றன. இவ்வாண்டு நடைபெற்ற உலக மரபு விழாவினை தமிழக அரசு தொல்லியல் துறை ஐந்து பகுதிகளில் சிறப்பாகக் கொண்டாடுகின்றது. விழாவின் நிறைவாக இந்நூல் வெளியிடப்படுகின்றது. இந்நூலில் இவ்வாண்டில் நடைபெற்ற **தொல்லியல் நோக்கில் தமிழகம்** கருத்தரங்கு பற்றிய தொகுப்பும், இவ்வாண்டில் கண்டுபிடிக்கப்பெற்ற அரிய கண்டுபிடிப்புகள் பற்றிய தொகுப்பும், பாதுகாப்பு பிரிவில் நடைபெற்ற பணிகள் பற்றிய தொகுப்பும் இடம் பெறுகின்றன.

இவ்வாண்டு கிபி.*2*-ஆம் ஆயிரத்தின் நிறைவு ஆண்டு ஆகும். இவ்வாயிரத்தின் தொடக்கத்தில் முதலாம் இராசராசன் ஆட்சி செய்தான். அவர் ஆட்சியில் தமிழகம் பல துறைகளிலும் பாய்ச்சல் முன்னேற்றம் கண்டது. அரசியல், பொருளியல், கலையியல், அறிவியல், மெய்யியல், இலக்கியம் எனப் பல்வேறு துறைகளில் தமிழகம் கண்ட முன்னேற்றம் அவன் காலத்திற்கு முன்பு கண்டிராத ஒன்று. இடைக்காலத்தில் பாரதூரமான மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. இவ்வாயிரத்தின் இறுதி நாட்களில் தமிழகம் பல்வேறு துறைகளில் முன்னேறி வருவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். இராசராசன் விட்டுச் சென்ற கலைப்பணிகள் இன்றும் நிலை பெற்றுள்ளன என்பது கன்னியாகுமரியில் நிறுவப் பெற்றுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையின் உயர்ந்தோங்கி நிற்கும் காட்சியால் புலப்படும்.

புத்தாயிரத்தின் தொடக்கத்தில் மரபுச் சின்னங்களையும், தொல்லியல் சான்றுகளையும் பாதுகாக்க உறுதி கொள்வோம்.

இந்நூல் சிறப்புற அமைவதற்குப் பணியாற்றிய திரு. இரா. பூங்குன்றன் *(காப்பாட்சியர், கோவை)* அவர்களுக்கும், திருமதி. சீ. வசந்தி *(அகழாய்வாளர், சென்னை)* அவர்களுக்கும், திரு. எஸ். ஸ்ரீகுமார், தொழில்நுட்ப உதவியர், அவர்களுக்கும் பாராட்டுகள்.

இந்நூலை நல்ல முறையில் அச்சியிட்டுக் கொடுத்த ஸ்மார்ட் ஃபாண்ட்ஸ் **(Smart Fonts)** லேசர் ஒளி அச்சு நிறுவனத்தினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கு. தாமோதரன்.

# தொல்லியல் 2000

## தொல்லியல் நோக்கில் தமிழகம்

தமிழ்நாடு தொல்லியல் துறையின் சார்பில் தொல்லியல் நோக்கில் தமிழகம் என்ற தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கு *1999* அக்டோபர் திங்கள் *20* முதல் *22* வரை மூன்று நாட்கள் எம்.ஆர்.சி நகரில் அமைந்துள்ள இந்தியன் வங்கியின் இமேஜ் அரங்கில் சிறப்புடன் நடைபெற்றது. கருத்தரங்கினைத் தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலையத்துறை செயலர் திரு. சு. இராமகிருட்டிணன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார். அவரது தொடக்க விழா உரையில் மனித இனம் ஆப்பிரிக்கா கண்டத்தில் தோன்றி மூன்று அலைகளாகப் பிரிந்து பரவிய விதம் குறித்து விவரித்தார். மேலும், மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற தொன்மை, பெருமைமிக்க இடங்கள் தமிழகத்தில் தான் இருக்கின்றன என்றும் தமிழக வரலாற்றைப் பற்றி மீளாய்வு செய்யக் கிடைக்கும் வாய்ப்புகளை ஊக்கப்படுத்த வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

கருத்தரங்கில் வரவேற்புரை நிகழ்த்திய தொல்லியல் துறை இயக்குநர் திரு. கு. தாமோதரன் அவர்கள் கடந்த *30* ஆண்டுகளாக தமிழகத்தில் தொல்பொருள் ஆய்வுகளின் மூலமாக ஏராளமான புதிய கண்டுபிடிப்புகள் வெளிவந்துள்ளன. ஆனால் பொதுமக்களுக்கு உரிய முறையில் சென்று சேரவில்லை, எனவே பொதுமக்களுக்கு இந்த தகவல்களைத் தெரிவிக்கவும், தமிழக வரலாற்றைத் திருத்தி எழுதும் வரலாற்று ஆசிரியர்களை ஊக்குவிக்கவும்தான் இக்கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தனது வரவேற்புரையில் தொல்லியல் நோக்கில் தமிழகம் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டதற்கான நோக்கத்தினை விளக்கினார்.

தமிழ்நாடு நாணயவியல் ஆய்வுக் கழகத்தின் தலைவரும், தினமலர் செய்தி இதழின் ஆசிரியருமான திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கருத்தரங்கு அரங்கில் அமைக்கப்பட்டிருந்த புதிய கண்டுபிடிப்புகளின் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். அவரது தொடக்க உரையில் இலங்கைக்கும், தமிழகத்திற்கும் இடையே நீண்ட காலமாக தொடர்பு இருந்து வந்துள்ளதால், இந்திய-இலங்கைக்கு இடையிலான கடல்பகுதியில் ஆழ்கடலாரய்ச்சி செய்தால் பல புதிய சான்றுகள் கிடைக்கும் என்றும், மேலை நாடுகளில் மேற்கொள்ளப்படும் ஆழ்கடலாராய்ச்சி போன்று நாமும் அயல்நாட்டு நிதியுதவியுடன் ஆழ்கடலாராய்ச்சி மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ளவது அவசியம் என்றும் கூறினார்.

தொடக்கவிழா, வாழ்த்துரை நிகழ்ச்சியில் சென்னைப் பல்கலைக்கழக தொல்லியல் துறையின் ஓய்வு பெற்ற பேராசிரியர் முனைவர் கே.வி. இராமன், மற்றும் முனைவர் எஸ். குருமூர்த்தி, ஆகியோரும், தற்போதைய பல்கலைக்கழக தொல்லியல்துறை தலைவர் பேராசிரியர் முனைவர். பி. சண்முகம், மற்றும் தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகம் கல்வெட்டியல் துறை தலைவர் முனைவர் ஏ. சுப்பராயலு, அவர்களும் கலந்து கொண்டு தொல்லியல் வளர்ச்சிக்கும் அதன் முன்னேற்றத்திற்கும் பல கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள்.

மூன்று நாட்கள் நடைபெற்ற இக் கருத்தரங்கின், ஏழு அமர்வுகளில் *74* கட்டுரைகள் படிக்கப்பெற்றன. முன்னேரே எண்பது கட்டுரைகள் பெற்றுத் தமிழ், ஆங்கிலம் என இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டன. தமிழ்த் தொகுதியில் *59* ஆய்வுக்கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இக்கட்டுரைகள், தொல்லியல், கல்வெட்டியல், கலையியல், சமயவியல், பொதுவியல் என்ற உட் பகுப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆங்கிலத் தொகுதியில் *20* ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இக்கருத்தரங்கின் நிறைவு விழாவிற்கு தமிழக அரசு தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை செயலாளர் **திரு. சு. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப** தலைமை வகித்தார். கருத்தரங்கில் ஆய்வாளர்கள் சமர்ப்பித்த கட்டுரைத் தொகுப்புகள் அடங்கிய புத்தகத்தைத் தமிழ் ஆட்சிமொழி-பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலைத்துறை அமைச்சர் **மாண்புமிகு. முனைவர். தமிழ்க்குடிமகன்** அவர்கள் வெளியிட்டு சிறப்புரையாற்றினார். அமைச்சர் அவர்களின் சிறப்புரையில் மைசூரில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ்நாட்டைச் சார்ந்த அரிய கல்வெட்டுப் படிகள், மீண்டும் சென்னைக்கு கொண்டு வரப்படும் என்றும், தொல்பொருளாய்வுத்துறை என்ற இத்துறையின் பெயர் தொல்லியல் துறை என்ற பெயர் மாற்றம் செய்யப்படும் என்றும் கூறினார்.

கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளின் இரண்டாம் தொகுப்பைப் பெற்றுக் கொண்ட கல்வெட்டியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் கோயில் கல்வெட்டுகளைப் பாதுகாப்பதுடன், பக்தர்கள் அவற்றைப் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கப் பலகைகள் கோயிலில் வைக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை முன்னாள் தலைவர் முனைவர் சி.ஈ. இராமச்சந்திரன் அவர்களும், மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் கோ. விசயவேணுகோபால் அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். நிறைவுவிழாவின் இறுதியில் துணை இயக்குநர் (பொறுப்பு) திரு. அ. அப்துல் மஜீத் அவர்கள் நன்றி நவில விழா இனிதே நிறைவுற்றது.

# உலக மரபு வார விழா

உலகின் பல்வேறு பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு நாடுகளில் அமைந்துள்ள வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பது இன்றியமையாதது என்று கருதிய ஐக்கிய நாடுகள் சபை ஆண்டு தோறும் ஏப்ரல் மாதம் *18*-ஆம் நாளை உலக மரபுரிமை நாளாக கொண்டாடிவருகின்றது. அதுபோன்றே இந்நாளை இந்திய அரசும், ஆண்டுதோறும் நவம்பர் மாதம் *19* முதல் *25* வரை மரபுச்சின்னப் பாதுகாப்பு வார விழாவாகக் கொண்டாடி வருகின்றது. அவ்வகையில் மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையினாலும், மாநிலத் தொல்லியல் துறைகளாலும் உலக மரபு வார விழா கொண்டாடப்பட்டுவருகின்றது.

மரபுச்சின்னங்களைப் பாதுகாக்கவும், அவற்றைப் பற்றிய விழிப்புணர்வைப் பொது மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை *1999* ஆம் ஆண்டு நவம்பர் *19* முதல் *25* வரை விழுப்புரம், தஞ்சாவூர், மதுரை, கோவை, மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உலக மரபு வார விழா நடத்த, தமிழ்நாடு அரசு முதன் முறையாக நிதி ஒதுக்கீடு அளித்தது.

## விழுப்புரம்

விழுப்புரம் மாவட்டத்தில் உலக மரபு வாரவிழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, விழுப்புரம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்களுக்கு வராற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் பற்றி விரிவாக எடுத்துக்கூறப்பட்டது. மேலும், வரலாற்றுக்கு முற்பட்ட தொல்பழங்கால ஓவியங்கள் காணப்படும் கீழ்வாலைக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு, அவ்வரலாற்றுச் சின்னப்பகுதியிலேயே ஓவியப்போட்டி நடத்தப்பட்டது; சிறந்த ஓவியத்திற்கு பரிசும் வழங்கப்பட்டது.

இவ் விழாவில் தொல்லியல் துறை இயக்குநர் திரு. கு. தாமோதரன் அவர்கள் வரவேற்புரை வழங்க விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு. இளங்கோவன் அவர்கள் தலைமை தாங்கினார். விழுப்புரம் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. எஸ்.வி. ரவி அவர்கள் முன்னிலை வகித்தார். டாக்டர் பாலதண்டாயுதம் அவர்களும், விழுப்புரம் அரசு மேனிநிலைப் பள்ளித்தலைமை ஆசிரியை, திருமதி. கஸ்தூரி அவர்கள், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் மாதவன் அவர்களும், ஜே. ஜே. பள்ளி, நிறுவனர் திரு. வீரராகவன் அவர்களும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். விழாவின் நிறைவில் தொல்லியல் துறையின் திருச்சி பதிவு அலுவலர் திரு. கி. ஸ்ரீதரன் அவர்கள் நன்றி கூறினார். இவ்விழா தொடர்பான பணிகளைத் திருக்கோயிலூர் காப்பாட்சியர் திரு. சொ. கோவிந்தராமன் அவர்கள் ஒருங்கிணைத்து நடத்தினார்.

## தஞ்சை

தஞ்சை மாவட்டத்தில் தொல்லியல் துறையின் கட்டுபாட்டிலுள்ள மராட்டியர் தர்பார் கூடம், சார்ஜாமாடி, இராஜராஜன் மணி மண்டப அகழ்வைப்பகம் மற்றும் மனோரா வரலாற்றுச் சின்னங்களைப் பள்ளி மாணவ, மாணவியர்களைக் கொண்டு பராமரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. அவ்வமயம் மரபுச் சின்னங்களைப் பற்றிய வரலாறுபற்றியும், அவற்றைப் பாதுகாப்பதின் முக்கியத்துவம் பற்றியும், அவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

உலக மரபு விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப்போட்டிகள் நடத்தப்பெற்றன. இப்போட்டிகளைத் தொல்லியல் அலுவலர் திரு. தி. சுப்பிரமணியன், இளநிலைப்பொறியாளர் திரு. சுவாமிநாதன், மற்றும் இளநிலைக் கல்வெட்டாய்வாளர் திரு. இரா. ஜெயராமன் ஆகியோர் நடத்தினர். இவ்விழாவிற்குத் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டுத்துறை பேராசிரியர் முனைவர் ஒய். சுப்பராயலு தலைமைதாங்க, தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டுத் துறை இணைப் பேராசிரியர் முனைவர் கே. ராஜன், சென்னை தொல்லியல் துறை உதவி இயக்குநர் திரு. செ. முத்துமாரியப்பன், வீரராகவா மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் க. திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

## மதுரை

உலக மரபு வாரவிழாவை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவிகளைக் கொண்டு திருமலை நாயக்கர் அரண்மனை வாளகம் தூய்மை செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதின் முக்கியத்துவத்தைப் பற்றி மாணவர்களுக்குச் சொற்பொழிவு நடத்தப்பட்டது. தூய்மை செய்யும் பணியுடன் பேச்சுப் போட்டியும், ஓவியப் போட்டியும் நடத்தப்பட்டு மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

இவ்விழாவினை மதுரை உதவி இயக்குநர் திரு. ச. ஹரிஹரன், காப்பாட்சியர் திரு. செ. போசு, தொல்லியல் அலுவலர் திரு. சொ. சாந்தலிங்கம், மற்றும் துறைப் பொறியாளர்கள் ஆகியோர் சிறப்புற ஏற்பாடு செய்தனர். விழாவில் ஓய்வு பெற்ற பேராசியர் இரா. வெங்கட்ராமன் அவர்களும் திரு. கு. ஞானசம்பந்தம் அவர்களும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

## இராமநாதபுரம்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரத்திலுள்ள இராமலிங்கவிலாச அரண்மனையைத் தூய்மை செய்யும் பணி பள்ளி மாணவ மாணவியர்களைக் கொண்டு சிறப்புற மேற்கொள்ளப்பட்டது. வரலாற்றுச் சின்னங்களின் சிறப்பு மற்றும் அவற்றைப் பாதுகாத்தலின் அவசியம் பற்றியும் மாணவர்களுக்கு

எடுத்துரைக்கப்பட்டது. இவ்விழா தொடர்பாக மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் திரு. எஸ்.எம். கமால், (இராமநாதபுரம் மாவட்ட வரலாற்று அறிஞர்) அவர்களும், ஸ்வார்ட்ஸ் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் திரு. ஜோசப் பென்னட், அவர்களும், பங்கேற்றுச் சிறப்பாக நடத்திக் கொடுத்தனர். தொல்லியல் துறையைச் சார்ந்த கல்வெட்டாய்வாளர்களான திரு. வெ. வேதாசலம், திரு. பொ. இராசேந்திரன், ஆகியோரும், திரு. செ.மா. கணபதி, இராமேசுவரம் காப்பாட்சியரும் விழாவினைச் சிறப்பாக நடத்தினர்.

## கோவை

உலக மரபு விழா கோவை மாவட்டத்தில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. *19.11.99* அன்று ஓய்வு பெற்ற நீதிபதி மாண்புமிகு செங்கோட்டுவேலன் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. புலவர் திரு. மணியன், திரு. ஐ. இராமசாமி, திரு. பூவண்ணன் ஆகியோர் உரையாற்றினார்கள். அன்று பிற்பகல் கோவை சங்கீஸ்வரர் கோயிலில் மாணவர்கள் உழவாரப் பணி செய்தனர். கல்வெட்டுக்களைப் படியெடுத்தனர். *21.11.99* அன்று கோவை அரசு கலைக்கல்லூரி வரலாற்றுத்துறை மாணவர்கள் விஜயமங்கலத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்களுக்குச் (சமணர் கோயில், நாகிஸ்வரர் கோயில், சித்திரமேழி விண்ணகர் கோயில்) சென்று அவற்றின் வரலாற்றுச் சிறப்பினைக் கண்டு களித்தனர். *23.11.99* அன்று அன்னூர் கே.ஜி. மகளிர் மேனிலைப்பள்ளி, அரசு மேனிலைப்பள்ளி, சொக்கம்பாளையம், காந்திஜி நினைவுப்பள்ளி ஆகிய பள்ளிகளைச் சேர்ந்த மாணாக்கர்கள் அன்னூர் மன்னீஸ்வரர் கோயிலில் உழவாரப் பணி செய்தனர். இந்நிகழ்ச்சியில் திரு. இரவீந்திரன் (தலைமை ஆசிரியர்) புலவர். இலட்சுமணன் (தமிழாசிரியர்), திருமதி புவனேசுவரி (முதுநிலைத் தமிழாசிரியர்). சிவசாமி, (திட்ட அலுவலர்) ஆகியோர் கலந்து கொண்டனர். *24.11.99* திருப்பூர் ஜெய்வாய் மகளிர் மேனிலைப்பள்ளி மாணாக்கியர்களுக்குத் தொன்மைப் பொருட்களைப் பாதுகாக்கும் வகை பற்றிக் கற்றுக் கொடுக்கப் பெற்றது. *25.11.99* அன்று பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி மேனிலைப்பள்ளி மாணாக்கர்கள், பேரூர் பட்டீஸ்வரர் கோயிலுக்குச் சென்று உழவாரப் பணி செய்தனர். மேலும், அவர்களுக்கு தொல்பொருள் துறையின் வீடியோ படம் காண்பிக்கப்பட்டது. திரு. மா. சந்திரமூர்த்தி (உதவி இயக்குநர், பொறுப்பு) தலைமை தாங்கினார்.

இறுதிநாள் விழாவில் முனைவர் பி.கே. வாணவராயர் அவர்கள், சிற்பி திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள், பேராசிரியர் மா. கணேசன் அவர்கள் புலவர். குப்புராசு அவர்கள், புலவர் இளங்கோ அவர்கள், முனவைர் மகேசுரன் அவர்கள், ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றியும், பேச்சுபோட்டி, கட்டுரை போட்டி, ஓவியப்போட்டி ஆகியவற்றில் பங்கேற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசு அளித்தும் சிறப்பித்தனர்.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை திரு. இரா. பூங்குன்றன், (காப்பாட்சியர், கோவை), அவர்களும், கோவை தொல்லியல் அலுவலர் திரு. பெ. கௌதமபுத்திரன் அவர்களும் செய்திருந்தனர்.

உதகை கல்வெட்டுப்பிரிவின் சார்பாக உடுமலை வட்டம், கடத்தூர் கோவில்களில் உலக மரபு வாரம் உழவாரப் பணித்திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. கணியூர் S.V. மேநிலைப் பள்ளி மாணவரும், பழனி பழனியாண்டார் மகளிர்கலைக் கல்லூரி வரலாற்றுத்துறை மாணவியரும் கடத்தூர் கோவிலைத் தூய்மைப்படுத்தும் பணியை மேற்கொண்டனர். உலகமரபு விழாத் தொடர்பான பணிகளை உதகை கல்வெட்டாய்வாளர் திரு. கருணானந்தன் மேற்கொண்டார்.

# அரிய கண்டுபிடிப்புகள்

## பெருங்கற்கால ஈமப்பேழைகள்

சென்னையிலிருந்து சுமார் *50* கி.மீ. தொலைவில் அமைந்துள்ள காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் வட்டம், மாம்பாக்கம் என்ற ஊரில் பெருங்கற்காலத்திய இரண்டு ஈமப்பேழைகள் களஆய்வின்போது கண்டறிந்துள்ளனர். இவற்றில் *18* கால்களைக் கொண்டுள்ள பெரிய ஈமப்பேழை தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்காலத்திய பேழைகளிலேயே மிகப் பெரியது என்று அறியப்படுகிறது. *148* செ.மீ. நீளமும், *63* செ.மீ. அகலமும், *80* செ.மீ. உயரமும் கொண்டுள்ள இப்பேழையின் காலம் *2000* ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கணக்கிடப்பட்டுள்ளது. களஆய்வின்போது சிறிய ஈமப்பேழை ஒன்றும், மூன்று கால் சாடி ஒன்றும், சிதைந்த இரும்புப் பொருட்களும் சேகரிக்கப்பட்டன. சிறிய ஈமப்பேழை *65* செ.மீ. நீளமும், *34* செ.மீ. அகலும், *44* செ.மீ. உயரமும் கொண்டுள்ளது. இவ்வகைப் பேழைகள் பெருங்கற்காலத்தைச் சார்ந்த மனிதர்கள் இறந்தவர்களை அடக்கம் செய்யப் பயன்படுத்தப்பட்டவைகளாகும்.

இப்பேழைகள் தற்பொழுது திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், பூண்டி நீர் தேக்கத்தின் அருகில் உள்ள தொல்லியல்துறை அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. திரு. இரா. செல்வராசு, தொல்லியல் அலுவலர், சென்னை, களஆய்வின்போது இவற்றைச் சேகரித்தார்.

## பெருங்கற்காலக் கல்பதுக்கைகள்

களஆய்வின்போது திருவண்ணாமலை மாவட்டம், குடியாத்தம் வட்டம், சேர்வைக்காரன்பட்டி கிராமத்தின் மலைப்பகுதியில் பெருங்கற்காலத்திய கல் பதுக்கைகள் பல இருப்பது கண்டறியப்பட்டது. கல் பதுக்கைள் நான்கு கருங்கற்பலகைகளைக் கொண்டு ஸ்வஸ்திக் முறையில் நிலத்துக்கடியில் புதைத்து அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மேல்புறம் மற்றொரு கற்பலகையைக் கொண்டு மூடப்பட்டும் உள்ளன. களஆய்வின்போது சில கல் பதுக்கைகளில் இடு துளை (Port hole) வெளியே தெரியும் வண்ணம் அமைக்கப்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டது. இந்த இடு துளை ‘ப’ வடிவத்தை ஒத்ததாகக் காணப்படுகிறது.

இப்பகுதிப் பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் பெரும்பாலும் காணப்படும் மூன்று கால் சாடியும், சிறிய செம்புவடிவ சாடியும், சிறிய கிண்ணமும், சேகரிக்கப்பட்டன. களஆய்வின்போது திருமதி *சீ.* வசந்தி, அகழாய்வாளர், *(*சென்னை*)*, திரு. எஸ். ஸ்ரீகுமார், தொழில் நுட்ப உதவியர், *(சென்னை)*, திரு. பி. முருகேசன், கல்வெட்டுச் சிற்றெழுத்தர், *(*சென்னை*)* ஆகியோர் உடனிருந்து இவற்றைச் சேகரித்தார்கள்.

நடுவில் தொட்டியும் அத்தொட்டியில் ஆமை உருவமும் தொட்டியின் இடது கீழ்புறம் சூரியனும் இடது மேல்புறம் மலைமுகடும் மலைமுகட்டிற்கு இடது புறம் சக்கரமும் தொட்டிக்கு மேல் வலப்புறம் இரு வட்டவடிவ உருவங்களும் அதற்குக் கீழ் நின்ற நிலையில் மனித உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. மறுபக்கத்தில் எவ்வித குறியீடுகளும் பொறிக்கப்படவில்லை.

முத்திரைக் காசுகள், முத்திரைப் பதிக்கும் முறையிலும் வார்ப்பு முறையிலும், தயாரிக்கப்பட்டுள்ளன. கி.மு. 11-ஆம் நூற்றாண்டிலேயே ஜனபதங்கள், மகாஜனபதங்கள் என்ற அரசுகள் முத்திரைக்காசு வெளியிட்டதாகவும் அக்காசுகள் தான் வடநாட்டு இலக்கியங்களில் குறிக்கப் பெறும் புராண என்னும் காசு வகையாகும் என்றும் நாணயவியலார் கூறுகின்றனர். மகத நாட்டில் ஆட்சி செய்த நந்த, மௌரிய அரச வம்சத்தினரால் வெளியிடப்பட்ட இத்தகைய வெள்ளி முத்திரைக் காசுகள் கி.மு. 5 ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் புழக்கத்தில் இருந்தமை தற்போது கிடைத்துள்ள வெள்ளி முத்திரைக் காசின் மூலம் அறியலாம். மனித உருவம் பொறிக்கப்பட்டுள்ள வெள்ளி முத்திரைக் காசுகள் தமிழ்நாட்டில் திருநெல்வேலி, சங்கரன்கோவில், மாம்பலம், வெம்பாவூர் போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. தற்போது இத்தகைய மனித உருவம் பொறிக்கப்பட்டுள்ள வெள்ளி முத்திரைக்காசு கரூரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வெள்ளி முத்திரைக் காசின் மூலம் கி.மு. 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கரூர் வடநாட்டோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்ததை அறிய முடிகிறது. இக்காசை திரு. நா. சணேசன், காப்பாட்சியர், கரூர், சேகரித்துள்ளார்.

## சங்ககாலச் சேரர் காசு

கரூர் மாவட்டம், கரூர் அமராவதி ஆற்றுப்படுகையில் செவ்வக வடிவிலான இச்செப்புக்காசு 2 செ.மீ. நீளமும், 1.7 செ.மீ. அகலமும் 5.670 கிராம் எடையும் கொண்டது. இக்காசின் ஒரு பக்கத்தில் வலப்புறம் நோக்கிய நிலையில் யானையின் உருவம் புடைப்புச் சிற்பமாக மிகத் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. யானையின் முன்புறம் கைக்கோடரியும், பின்புறம் மரமும் மேல்பகுதியில் ஆறு திட்டுக்களைக் கொண்ட மலை முகடும் அதனருகில் சூரியனும் காட்டப்பட்டுள்ளன. மறுபக்கத்தில் சேர மன்னர்களுக்குரிய வில்லும், அம்பும் அதனருகில் அங்குசமும் காட்டப்பட்டுள்ளன. இக்காசு கி.பி. முதல் நூற்றாண்டளவில் கரூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சேர மன்னர்களின் காலத்தைச் சார்ந்ததாகும். திரு. நா. சணேசன், காப்பாட்சியர், கரூர், இக்காசைச் சேகரித்துள்ளார்.

## களத்தூர் கொங்கரைக் கல்வெட்டு

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம்., களத்தூர் கொங்கரை, பெரிய ஏரியின் கீழ் உள்ள களத்தூர் கொங்கரையில் கிடைத்துள்ள கல்வெட்டில் கொங்கரையர் கள்ளபெருமானார் என்பவரது மனைவி கொங்கரசியார் என்பவர் ஏரிக்கு மதகு அமைத்துக் கொடுத்ததைக் குறிக்கிறது, கி.பி. 8-9 ஆம் நூற்றாண்டு

எழுத்தமைதியைக் கொண்டுள்ள இக்கல்வெட்டை திரு. க. குழந்தைவேலன், கல்வெட்டாய்வாளர், சென்னை, படியெடுத்து படித்தளித்தார்.

*1.* ஸ்ரீ யா(ண்) டு உயர
*2.* கொங்கரையர் கள்ள பெ
*3.* ருமானார் தெவியார் கொங்கரசியா
*4.* ர் களத்தூ ரெரிச் செய்வித்த
*5.* தூம்பு ஸ்ரீ

## வணிகர் கல்வெட்டு (ஐந்நூற்றுவர் கல்வெட்டு)

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், மேல் நங்கவரம் கிராமத்தில் கன்னிமார் கோயில் அருகே ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வணிகர் குழுவின் கல்வெட்டு ஒன்று கிரந்தம் மற்றும் தமிழ் எழுத்துடன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

தூண் போன்ற கல்லின் ஒருபுறம் நான்கு கைகளுடன் கூடிய துர்க்கையின் உருவமும், அதன் பின்புறம் திருமகளின் தொன்மையுருவான ஸ்ரீவஸ்தமும் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. திருமகளின் இருபுறமும் குத்துவிளக்குகளும் அதன் கீழே கல்வெட்டும் உள்ளன. கல்வெட்டுப் பகுதியிலேயே ஒரு தண்டில் கோர்த்த இரு தொங்கல்களாகப் பகம்பை சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது. வலது புறம் சுருள் பட்டா, அரிவாள், சிற்றுளி ஆகிய படைக்கலன்களும், இடது புறம் நீண்டவாளும், கேடயமும் புடைப்பு சிற்பமாக காட்டப்பட்டுள்ளது.

கல்வெட்டின் வாயிலாக பவத்ரோணச்மன் என்பவன் வளஞ்சிய ஐந்நூற்றுவர் பொருட்டு ஐந்நூற்றுவன் என்ற பெயரில் ஒரு தோட்டம் அமைத்ததை அறிகின்றோம். அதனை வாட்படையினரும், பன்மையாரும் காக்க வேண்டும் என்ற செய்தியும் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

கி.பி. *9* ஆம் நூற்றாண்டு முதல் வளஞ்சியர்-ஐந்நூற்றுவர் என்ற பெயரில் வணிகர் குழுக்கள் சிறந்து விளங்கின. காளி, துர்க்கை, அய்யப்பொழில் நங்கை போன்ற தெய்வங்களை வழிபட்ட இவர்கள் குழுவின் பெயரால் பல தர்மங்களைச் செய்து வந்துள்ளனர். அவ்விதமே நங்கவரத்திலும், தோட்டம் அமைத்துள்ளனர் என்று அறியப்படுகின்றது. திரு. கி. ஸ்ரீதரன், பதிவு அலுவலர், திருச்சி, திரு. நா. கணேசன், காப்பாட்சியர், கரூர், ஆகியோர் மேற்கொண்ட களஆய்வின் போது கண்டுபிடிக்கபட்டது.

கல்வெட்டு வாசகம் :

*1.* ஸ்வஸ்திஸ்ரீ பவத்ரோணச் மன்
*2.* தோட்டம் வள
*3.* ஞ்சியர் ஐஞ்னூ
*4.* ற்றுவர்
*5.* பேர் அஞ்னூர்
*6.* றுவன் இவர்
*7.* கள் மக்கள்
*8.* வாள்காளாரும்
*9.* ம் பன்மை
*10.* யாரு ரட்ஷை

## ஐந்நூற்றுவன் குளம் கல்வெட்டு

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீ பெரும்புதூர் வட்டம், பொழிச்சலூர் (சென்னை-பல்லாவரம் வழி) குளத்தின் அருகில் சாலையோரத்தில் ஐந்நூற்றுவன் என்ற எழுதப்பட்ட புதிய கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

ஒழுங்கற்ற கல்லில் செதுக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டின் எழுத்தமைதியினைக் கொண்டு, இக்கல்வெட்டு கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று அறியப்படுகின்றது. இக்கல்வெட்டில் ஐந்நூற்றுவன் குளம் என்று மூன்று வரிகளில் எழுதப்பட்டுள்ளது. இடப்பக்கம் குத்துவிளக்கு, உடுக்கை போன்றுள்ள பசும்பை, (பணப்பை) நீண்ட வாள் ஆகியனவும் வலது பக்கம் கலப்பையும், குத்துவிளக்கும் செதுக்கப்பட்டுள்ளன.

இடைக்காலத்தில் தமிழகத்தில் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர், நாநாதேசிகள், மணிக்கிராமத்தார், சித்திரமேழிப்பெரிய நாட்டார், அய்யப்பொழிலார் என்ற பெயர்களில் பல வணிகக் குழுக்கள் இருந்தன. அவற்றில் ஒரு குழுவினரே ஐந்நூற்றுவர் என்பவராவர். இவர்கள் தமிழகத்தின் பல பகுதிகளில் ஐந்நூற்றுவன் என்ற பெயரில் குளம், ஏரி, மண்டபம், பெருந்தெரு, திருக்காவணம், அம்பலம், பிராமண ஊர்கள், ஐந்நூற்றீசுவரர் என்ற பெயரில் கோயில்கள் ஆகியவற்றை ஏற்படுத்திய இவர்களது பொது நடவடிக்கைகள் குறித்து கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

இக்கல்வெட்டில் கலப்பைச்சிற்பம் காணப்படுவது இவர்களது வேளாண் பொருள்சார் வணிகத்தையும், பசும்பை, பொன்-மணி சார் வணிகத்தையும் காட்டுகிறது. வாள் இவர்களுக்குகென்று பாதுகாப்பு படையமைப்பு இருந்தமையைக் காட்டுகிறது. இக்கல்வெட்டை, இளநிலைக் கல்வெட்டாய்வாளர், திரு. மே. சீனிவாசன் கண்டுபிடித்துள்ளார்.

## பீமீஸ்வரர் கோயில் கல்வெட்டு

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்பத்தூர் வட்டத்தில் சென்னையிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள செரப்பணஞ்சேரி கிராமத்தில் கள ஆய்வு மேற்கொண்டபோது பழுதுபட்ட நிலையிலுள்ள பீமீஸ்வரர் திருக்கோயிலின் (தூங்கானை வடிவில்) கருவறை அதிட்டானத்தில் கல்வெட்டுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டன. எழுத்தமைதியைப் பார்க்கும் பொழுது இவை கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தன என்று அறியப்படுகிறது. இக்கல்வெட்டுகளைக் கொண்டு இக்கோயில் மூன்றாம் இராஜராஜ தேவன் காலத்தில் இவ்வூர் பெருவஞ்னூரான நல்லூர் என்று வழங்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக்களில் கோயிலுக்கு விளக்கெரிக்க கொடையளிக்கப்பட்ட செய்தி அறியப்படுகின்றது. இக்கல்வெட்டுக்கள் விஜயகண்ட கோபாலன், ஸ்ரீ வீரராஜேந்திரன் ஆகிய மன்னர்கள் காலத்தில் வழங்கப்பட்ட தானங்களைக் குறிக்கின்றன. கோயில் இறைவன் வீமீசுரமுடைய

## நடுகல்

கரூர் மாவட்டம், கரூர் வட்டத்திலுள்ள, பௌத்திரம், கரூர்-கோவை சாலையில் கரூரிலிருந்து சுமார் *30* கி.மீ. தொலைவிலுள்ளது. இவ்வூரில் உள்ள புலிகுத்திக் காட்டில் இந்நடுகல் கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் *3 1/2* அடி உயரமும் *2 1/2* அடி அகலமும் கொண்ட பலகைக் கல்லில் வீரர்களின் உருவம் புடைப்புச் சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. தலையில் கொண்டையும், இடையில் ஆடைக்கட்டும் மெலிந்த உடலமைப்பும் கொண்ட இரு வீரர்களில் ஒருவன் தனது இடது கையால் குதிரையின் தலையைப் பிடித்துக் கொண்டு வலது கையில் உள்ள வாளின் மூலம் குதிரையின் கழுத்தில் குத்துவது போன்றும், மற்றோர் வீரன் தன்னிடமுள்ள ஈட்டியைக் கொண்டு குதிரையோடு அதன்மீது அமர்ந்த வீரனையும் சேர்த்துக் குத்திக் கொல்வது போன்றும் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இந்நடுகல் திரு. நா. கணேசன், காப்பாட்சியர், கரூர், அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

குதிரை மேல் வந்து ஆநிரை கவர்ந்த பகைநாட்டு வீரனோடு போரிட்டு மாண்ட இரு வீரர்களின் மறப் பண்பைப் போற்றி இவ்வீரக்கல் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மலையமான் திருமுடிக்காரி இரவில் குதிரைமேல் சென்று அயலூரிலிருந்த ஆநிரைகளைக் கவர்ந்து கொண்டு வந்ததாக நற்றிணையும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் விந்திய மலைப் பகுதியிலிருந்து ஆநிரைகளைக் கவர்ந்து வந்ததாகப் பதிற்றுப்பத்தும் கூறுகின்ற வரலாற்று நிகழ்வுகளை நினைவுப்படுத்துவதாக இந்நடுகல் அமைந்துள்ளது. வாழும் நெறியறிந்து வாழ்ந்து கல்நின்று காலம் கடந்த புகழுக்குரியாரைப் போற்றி பாராட்டும் மரபினை தமிழர்கள் காலம் காலமாக பின்பற்றியதை இந்நடுகல் மூலம் அறியலாம்.

## காளையை அடக்கிய வீரனின் நடுகல்

திருச்சி மாவட்டம், பெரம்பலூர், நாகலாபுரத்தில் சுமார், *300* ஆண்டுகளுக்கு முந்தைய ஜல்லிகட்டில் வீரமரணம் அடைந்தவருக்கு நடுகல் சிலை அமைக்கப்பட்டுள்ளது. *1* மீட்டர் உயரமும், *60* செ.மீ. அகலமும் உள்ள கற்பலகையில் காளை ஒன்று நடுவில் புடைப்புச் சிற்பமாகப் பொறிக்கப்பட்டு உள்ளது. அதன் கழுத்தில் இருக்கும் கயிற்றை இரண்டு பேர் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். பயில்வான் போல உடல்கட்டு உள்ள ஒருவன் அதைப் பிடித்துக் கொண்டிருக்க இவ்வீரன் அருகில் ஒரு பெண்ணும், சிறுவனும், நின்று கொண்டு இருக்கிறார்கள். சிற்பத்தின் மேல் பகுதியில் சூரியனும், பிறைவடிவச் சந்திரனும், செதுக்கப்பட்டுள்ளன. சிற்பத்தின் கீழ்ப் பகுதியில் *6* உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவர்கள் மேலே உள்ள வீரனை வணங்குவதாக வடிக்கப்பட்டு உள்ளது. வீரனின் தலையலங்காரம் அணிகலன்கள் ஆகியவை நாயக்கர் காலக்கலைப் பாணியினை ஒத்துள்ளது. ஜல்லிக்கட்டு வீரனுக்கு நடுகல் எழுப்பப்பட்டிருப்பது சிறப்பான செய்தியாகும். இதனை திரு. கி. ஸ்ரீதரன், பதிவு அலுவலர், திருச்சி, தமது களஆய்வில் கண்டுபிடித்துள்ளார்.

## திருப்பரங்குன்றம் கோயில் நிதிச் செப்பேடு

மதுரை, ஆரப்பாளையத்தில், நாயக்கர் காலத்துக்குப் பின்னர் கி.பி. *1760*-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஒரு செப்பேடு கிடைத்துள்ளது. இச்செப்பேடு திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில் பணிகள் தொடர்ந்து நடந்திட மண்டக வரியாக குயவர்கள் தண்டச் சக்கரத்துக்கு *5* பொன் அளித்து தர்மத்தைத் தொடர்ந்து தடையில்லாமல் நடத்திட வேண்டும் என்பதையும், குயவர்களுக்கு சலுகைகளாக வழங்கப்பட்ட வருமானம் முழுவதையும் கோயில் திருப்பணிக்கு அளித்து விட வேண்டும் என்பதையும் குறிப்பிடுகின்றது. செப்பேடு சூட்டுக்கோல் இராமலிங்க சுவாமிகள் மடாலய அறங்காவலர் ஆர். முத்தழகன் அவர்களிடம் உள்ளது. திரு. செ. போசு, திரு. பொ. இராசேந்திரன், திரு. வெ. வேதாசலம், திரு. சொ. சாந்தலிங்கம், மதுரை, ஆகியோர் ஆய்வு செய்து படித்தனர்.

மதுரையைச் சார்ந்த உருத்திரப்பச் செட்டியார், அழகப்பச் செட்டியார், சின்னமுத்தழகு செட்டியார், பெரிய முத்தழகு செட்டியார், வேங்கடாத்தி செட்டியார், மற்றும் மறந்தாங்கி வேளாளர், திம்மசெட்டி வேளான், சொக்கநாத வைத்தியர் உள்ளிட்ட உறவின்முறையினர் அனைவரும் சேர்ந்து எழுதிக் கொடுத்த செப்பேடு ஆகும்.

## உப்பிலிய நாயக்கர் மடத்துச் செப்பேடு

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் நங்கவரத்தைச் சார்ந்த திரு. வே. பெருமாள் வசம் *22* x *16* செ.மீ. அளவு கொண்ட தெலுங்கு மொழிச் செப்பேடு ஒன்றுள்ளது. இச்செப்பேடு திருவரங்கம் கற்பூரச் செட்டிகள் மடம் (உப்பிலிய நாயக்கர்) பற்றிய விவரங்களைத் தெரிவிக்கின்றது. இச்செப்பேட்டின் காலம் கி.பி. *16-17*-ஆம் நூற்றாண்டாகும். இதனை பேராசிரியர் முனைவர் எ. சுப்புராயலு அவர்கள் மொழி பெயர்த்தளித்தார். திரு. கி. ஸ்ரீதரன், பதிவு அலுவலர், திருச்சி, களஆய்வு செய்யும் போது இது கண்டுபிடிக்கப்பட்டது.

சொக்கநாத நாயக்கர் பேரனும், ரங்க கிருஷ்ணமுத்து வீரப்ப நாயக்கரின் மகனுமான விஜயரங்க சொக்கநாத நாயக்கர் (மதுரை நாயக்க அரசன்) அவர்கள் நவராத்திரிக் கொலு விழாவில் வாணப்பட்டரை இயக்கும் கற்பூர செட்டிகளுக்கு திருமுகவாசல் ராயகோபுரத்துக்குக் கிழக்கில் ஜம்புகேசுவரத்துக்குப் போகும் வழியில் *16* சாலை மண்டபத்துக்கு *180* அடிக்கு *100* அடி இடம் வழங்கப்பட்டதையும், இதற்கு மாறாக கற்பூர செட்டி வம்சத்தினர் ஆண்டுக்கு, அரண்மனைக்கு வாணம் உப்பு நூறு மணங்கு கொடுத்து வர வேண்டும் என்பதையும் செப்பேடு குறிப்பிடுகின்றது. இந்தச் செப்பேடு கோவிந்தய்யன் அனுமதியின் பேரில் வெங்கட்ராவு என்பவரால் எழுதப்பட்டதாகும்.

## தொல்பொருட்கள்

நாகை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், பூம்புகார் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில், பழமையான மருந்து சுரைக் குடுக்கை, சங்ககால செங்கற்கள், சுடுமண் பொம்மைகள், மாட்டின் கொம்புப் பகுதி, மாட்டுக் கொம்பால் ஆன குடுவை, பீங்கான் பொத்தான், விலைமதிப்பற்ற கற்களால் ஆன கல் மணிகள், சோழர்கால அகல் விளக்கு போன்றவற்றை திரு. கோ. முத்துச்சாமி, கல்வெட்டாய்வாளர், மயிலாடுதுறை, சேகரித்துள்ளார்.

## சுடுமண் ஏடுகள்

கோவை மாவட்டம், வடக்கு கோவை வட்டம், பேரூர் பகுதியில் பல தொல்பொருட்கள் கிடைத்த வண்ணம் உள்ளன. இவற்றில் வட்ட வடிவிலும் செவ்வக வடிவிலும் நீள் செவ்வகவடிவிலும் அமைந்துள்ள சுடுமண் ஏடுகள் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்தச் சுடுமண்தகடுகள் மட்டுமின்றி சுடுமண் பொம்மைகள், பானைப்பொறிப்புகள் ஆகியவையும் கிடைத்துள்ளன. இந்தப் பொறிப்புக்களுடன் கூடிய பானைகளில் இரண்டு கருப்பு-சிவப்பு வகையைச் சேர்ந்தவை. அவற்றின் மேல் செங்காவி வண்ணம் பூசப் பெற்றுள்ளது. கோவை மரபுக்குரிய நெளிநெளிவான கோடுகள் உள்ளன.

தகடுகளில் எருமிநாடு குமுழூர்காடன் என்று எழுதப்பெற்றுள்ளது. இந்த வாசகம் திரும்பத் திரும்ப வருகின்றது. இதே வாசகம் [illegible]. என்று எழுதப் பெற்றுள்ளது. இந்த நான்கு சொற்கள் வெவ்வேறு வகையில் எழுதப் பெற்றுள்ளன. இவை மட்டுமின்றி விளங்கிக் கொள்ள முடியாத பல எழுத்துக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. எருமி என்ற சொல் [illegible] என்று எழுதப் பெற்றுள்ளது. அவையாவன [illegible]. இவ்வெழுத்துக்கள் மேலே கூறப்பெற்ற வாசகத்தில் இடையிடையே பொறிக்கப் பெற்றுள்ளன. எருமிநாடு குமுழூர்காடன் என்ற வாசகத்தில் எகரத்திற்கு 𑀏 என்ற குறியீடு உள்ளது. டுகரத்திற்கும் [illegible] என்ற குறியீடு உள்ளது. ழுகரத்திற்கு [illegible] என்ற குறியீடு உள்ளது. இவ்வெழுத்துக்கள் ஒரு குறிப்பிட்ட ஒலியைக் குறிக்கும். இவை மட்டுமின்றி எந்தவிதமான பொருத்தமும் இல்லாமல் மேலே குறிக்கப் பெற்ற குறியீடுகள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. இந்தப் பொறிப்புகளுடன் சில சுடுமண் பொம்மைகளும் கிடைத்துள்ளன. ஒரு பொம்மையின் பின்புறத்தில் பதினேழு வரிகள் பொறிக்கப் பெற்றுள்ளன. இந்தப் பதினேழு வரிகளிலும் எருமிநாடு குமுழூர்காடன் என்று திரும்பத் திரும்ப பொறிக்கப் பெற்றுள்ளன. சிலவரிகளில் இறுதியில் உள்ள காடன் என்பதற்குப் பதிலாக நாடன், நாகன் ஆகிய சொற்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

இந்த ஓடுகளின் பின்புறத்திலும், முன்புறத்திலும் பல கோட்டுருவங்கள்

வரையப்பட்டுள்ளன. மலை, சூரியன், சந்திரன், ஆறு, படகு, ஓடம், நாகம் ஆகிய உருவங்கள் உள்ளன. பிற உருவங்கள் புரிந்து கொள்ள முடியவில்லை. கோட்டுருவங்களில் சில எழுத்துக்களும் பொறிக்கப்பெற்றுள்ளன. குடிசை வடிவிலான கோயில் வரையப்பெற்றுள்ளது.

பின்னால் வரையப் பெற்றுள்ள கோட்டுருவங்கள் பற்றிய ஆய்வு தொடர்ந்து செய்யப்பெறுதல் வேண்டும். பழங்குடிகள் வரையும் கோட்டுருவங்களுடன் இந்தக் கோட்டுருவங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டும்.

## சுடுமண் பொம்மைகள்

போளுவாம்பட்டி, புலவர் ஐ. இராமசாமி அவர்களிடம் இருபதுக்கும் மேற்பட்ட சுடுமண் பொம்மைகள் உள்ளன. அப்பொம்மைகளில் சிலவற்றின் பீடத்தின் அடிப்பகுதியில் காடஅன் என்று எழுதப்பெற்றுள்ளது. காடன் என்ற சொல் மிகுதியும் பயின்று வரக்காணலாம். சுடுமண் பொம்மைகளில் நாகம் மனித உருவங்களுடன் வடிக்கப் பெற்றுள்ளதைக் காணலாம். பெண், ஆண் ஆகிய இருபாலர் உருவங்கள் வேறுபடுத்திப் பார்க்க முடியாத நிலையில் இவ்வுருவங்கள் அமைந்ததுள்ளன. ஆணின் அகன்ற மார்பினைக் காட்ட பெண்களின் கொங்கையைப் போல வடித்துள்ளனர்.

## கொற்றவை

இந்தச் சுடுமண் பொம்மை தொகுப்பில் கொற்றவை உருவங்களும் அடங்கும். ஒன்று ஆடையின்றியும், மற்றொன்று ஆடையுடனும் வடிக்கப் பெற்றுள்ளது. இவ்விரண்டு உருவங்களிலும் கொற்றவை நான்கு கைகளுடன் வடிக்கப் பெற்றுள்ளது. கையில் உள்ள சின்னங்கள் தெளிவாக இல்லை. கொற்றவை உருவங்கள் நாட்டார் வழக்கின் (Folk Traditions) செல்வாக்கிற்குட்பட்டவை. இறுதியாகத் தற்போது இரண்டு சுடுமண் உருவங்கள் (பலகை அமைப்பில்) கிடைத்துள்ளன. இரண்டிலும் சோமாஸ்கந்தர் உருவம் (தாய், தந்தை, குழந்தை?) உள்ளது. இரு புறங்களிலும் சரஸ்வதி உருவங்கள் (?) இரண்டும் வடிக்கப் பெற்றுள்ளன. பின்புறத்தில் கோட்டு உருவங்கள் உள்ளன.

சுடுமண் பொம்மைகள் மூன்று வகையான கலைப்பாணிக்குரியவை. ஏற்கனவே கொங்குப் பகுதியில் சுடுமண் பொம்மைகள் கண்டெடுக்கப்பெற்றுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை இயக்கன், இயக்கி உருவங்களே. போளுவாம்பட்டி, (கோவை) கொளகத்தூர், மாட்லாம்பட்டி (தருமபுரி) பூம்புகார் ஆகிய ஊர்களில் கிடைக்கும் சுடுமண் பொம்மைகள் ஒரே கலைப்பள்ளிக்குரியவை. நகர மரபிற்குரியவை. மேலும் சாதவாகனர் காலத்து சுடுமண் பொம்மைகளின் கலை நுட்பத்துடன் விளங்குபவை. ஆனால் அண்மையில் பேரூரிலிருந்து கண்டெடுக்கப்பட்ட சுடுமண் பொம்மைகள் மேலே குறிக்கப் பெற்ற நகர கலை மரபிற்கும், சாதவாகனர் கலை மரபிற்கும் அப்பாற்பட்ட கலை மரபினைச் சுட்டுவதாக அமைந்துள்ளன. இந்தக் கலை மரபு

கொங்கு மண்ணில் உருவானதா? அல்லது வேறு பகுதியில் இருந்த மக்கள் கொண்டு வந்த மரபா? என்பது இனி வரும் ஆய்வுகள் தான் உறுதி செய்ய வேண்டும்.

சோமாஸ்கந்தர், சரஸ்வதி உருவங்கள் வடிக்கப் பெற்ற சுடுமண் பொம்மையில் பிராமணிய கோட்பாடும், மரபும் செல்வாக்கு பெற்றுள்ளன. இவ்வுருவங்கள் பல்லவ சிற்பங்களை நினைவுபடுத்துகின்றன.

நாகர்

பேரூர் தொல்பொருட்களில் குறிப்பிடத்தக்க தொல் பொருள் மாக்கல்லால் செய்யப் பெற்ற ஐந்து தலைநாகம் ஆகும். முன்புறத்தில் வாலையும், உடலையும் அழகாகச் சுருட்டி ஐந்து தலைகளையும் கம்பீரமாகப் படமெடுத்து ஆடும் காட்சி வடிக்கப்பெற்றுள்ளது. பின்புறம் பதினொரு வரிகள் தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. எருமிநாடு குமுழூர் நாகர் என்று எழுதப் பெற்றுள்ளது. மேலும் எருமிநாடு குமுழூர்காடன் என்ற வாசகமும் உள்ளது.

அண்மையில் கிடைத்த இரண்டு ஓடுகளில் ஒன்றில் மேலே கூறப்பட்ட வாசகம் எட்டு வரிகளில் எழுதப் பெற்றுள்ளது. மேலும் எட்டு வரிகளில் வேறு வாசகம் எழுதப்பட்டுள்ளது. மற்றொன்றில் ஒரு புறம் பழைய வாசகமும், மற்றொரு புறம் புதிய வாசகமும் எழுதப் பெற்றுள்ளன. புதிய வாசகம் ஐந்து வரிகளே உள்ளன.

புதிய வாசகம் மதுரை மீனாட்சிபுரம் தமிழ்க் கல்வெட்டின் சொற்கள் பலவற்றையும் கொண்டுள்ளது. அவற்றில் குறிப்பிடத்தக்கவை கணிய். நந்தஸிரிய், ஸாலகன் நெடுஞ்சாழியன், ஈதபாளி, தம (ம்) ஆகியவை. அக்கல்வெட்டில் குறிக்கப்படாத சொற்களும் புதிய வாசகத்தில் பயின்று வரக் காணலாம். அவையாவன நாதோதணாய் நன்னன், எஞஊநாடு (உண்மையில் நாட்டு என்று எழுதப்பெற்றுள்ளது) மியிரியர், மிரத்தி, கோஅத, சதாஞ் கோட்டுபாளி வணியன், சினன் (ச்ஈனந்) மணிய், ஈஈசர், பாஞ சாதைய் தந்தைய் ஆகியவை.

நெடுஞ்செழியன் ஸலகன் ஈளஞ்சாடிகன் தந்தைய்சடி செஈய பாளி என்ற வாசகமும், வழுத்திய் கொட்டு (பித) அ பாளி போன்ற சொற்களும் குறிப்பிடத்தக்கவை இரண்டாவது ஓட்டில் நந்த அஸிரிய் என்ற வாசகம் மீனாட்சிபுரம் கல்வெட்டில் இருப்பது போலவே எழுதப் பெற்றுள்ளது. முதல் ஓட்டிலும் இரண்டாவது ஓட்டிலும் எஞஊ நாட்டு நன்னன் என்ற வாசகம் பயின்றுவரக் காணலாம். நன்னன் என்ற சொல்லை பிழைபட எழுதியுள்ளனர்.

பொதுவாக இவ்விரு ஓடுகளில் பயின்று வரும் எழுத்துக்கள் பிழைகள் நிறைந்தததவையாக உள்ளன. பாளி என்பது [illegible] என்றும் [illegible] என்றும் எழுதப் பெற்றுள்ளது. மணி என்பதை. [illegible] என்று எழுதப் பெற்றுள்ளது. கொட்டு (கோட்டு), என்பது [illegible]

என்று எழுதப்பெற்றுள்ளது. நெடுஞ்செழியன் என்பது 𑀦𑁂𑀝𑀼𑀜𑁆𑀘𑁂𑀵𑀺𑀬𑀷 என்று எழுதப் பெற்றுள்ளது. இந்தச் சொல்லில் முதலில் வரும் கோ என்ற எழுத்து மீனாட்சிபுரத்தில் இருப்பதைப் போலவே 𑀓𑁄 என்று எழுதி பிறகு இந்தப் பொறிப்பில் மற்ற இடங்களில் கோ 𑀓𑁄 எழுதப் பெற்ற முறையில் திருத்தப் பெற்றிருக்க வாய்ப்புண்டு. அல்லது 𑀓𑁄 என்று எழுதப்பெற்றப் பின்னர் 𑀓𑁄 என்று திருத்தப் பெற்றிருக்க வேண்டும்.

முதல் பொறிப்பில் எருஊ நாட்டு நன்னன் என்று குறிக்கப் பெறுகின்றது. கொங்குப் பகுதியில் எருஊ (எரூர்) நாடு என்ற பெயரில் இதுவரை குறிப்பு ஏதும் கிடைக்கவில்லை. இறுதி வரியில் நன்னன் செ ஈ ய (யா) பாளிஈய் என்று குறிக்கப் பெறுகின்றது. இந்தப் பாளி மலைக்குகைக்குள்ளதா அல்லது நிலப் பகுதிக்குள்ளதா என்ற கேள்வி எழுகின்றது. 'குராப் பள்ளி துஞ்சிய' 'இலவந்திகைப்பள்ளி துஞ்சிய' என்று புறநானூற்றுப் பாடல்களின் அடிக்குறிப்பில் காணப் பெறுகின்றது. இங்கு குறிக்கப் பெறும் பள்ளிகள் மறைந்த வேந்தர்களுக்காக நிலப் பகுதியில் அமைக்கப் பெற்ற பள்ளிகள் என்று கொள்ளலாம். அந்த வகையில் நன்னன் அமைத்த பாளி (பள்ளி) அவன் முன்னோன் ஒருவனுக்காக உருவாக்கப் பெற்றதாகலாம்.

சங்க நூல்களில் நன்னன் என்ற பெயரில் மூன்று பேர்கள் குறிக்கப் பெறுகின்றனர். ஒருவன் பெண் கொலை புரிந்த நன்னன், மற்றொருவன் நன்னன் உதியன். இவ்விருவரும் மேற்குக் கடற்கரையில் ஆண்டவர்கள். மூன்றாமவன் செங்கண் மாத்து நன்னன். இவன் மலைபடுகடாத்தில் குறிக்கப் பெறுகின்றான்.

மூன்றாவது குறிப்பிடப்பட்ட நன்னன் கொங்கு நாட்டிற்குரியவன் அல்லன். முதலில் கூறப்பெற்ற நன்னனும், இரண்டாவது குறிக்கப் பெற்ற நன்னனும் மேற்குக் கடற்கரையில் ஆண்டதால் அவர்கள் பாலக்காட்டுக் கணவாய் வழியாக வந்து கொங்குப் பகுதியை ஆண்டிருக்க வாய்ப்புண்டு. பொள்ளாச்சிக்கு அருகிலுள்ள ஆனைமலை கி.பி. *11-12,* ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் நன்னனூர் என்று அழைக்கப் பெறுகின்றது. ஆனைமலைக்கருகில் ஆழியாற்றணைப்பகுதியில் சமணப்பாழி (படுக்கை) உள்ளது. கல்வெட்டு இல்லை. ஆனை மலையில் பெருங்கற்சின்னங்கள் உள்ளன. ரோமானியக்காசுகள் நாற்பது கிடைத்துள்ளன. அவை வெள்ளியால் செய்யப் பெற்றவை. டைபீரியஸால் (கி.பி. முதல் நூற்றாண்டு) வெளியிடப் பெற்றவை.

இந்தச் சான்றுகள் மட்டுமின்றி பொறிப்பில் நாழி என்று ஒரு சொல் பயின்று வருகின்றது. அது ஆழியாற்றின் திரிந்த வடிவமாகும். ஆழிஅம்மன் என்ற பெண் தெய்வமும் சமணப் படுக்கை அருகில் வழிபாடு செய்யப்பெறுகின்றது. இந்தப் பின்புலத்தில் நன்னன் சய்த பள்ளி ஆனைமலைப்பகுதியில் உருவாக்கப் பெற்றதாகலாம்.

கோவை, பேரூரில் கிடைக்கும் தொல்பொருட்களை திரு. இரா. பூங்குன்றன், காப்பாட்சியர் கோவை சேகரித்து ஆய்வு செய்துவருகின்றார்.

## பாதுகாப்புப் பணி

வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாப்பு தமிழகத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க, கட்டடங்கள், கோயில்கள், அரண்மனைகள், நினைவுச் சின்னங்கள், குகைத்தளங்கள் பல உள்ளன. இவற்றில் சிறந்த ஓவியங்கள், சிற்பங்கள் பாதுகாக்கப் படவேண்டியவையாகும். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் பாதுகாப்பில் 83 வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப் பட்டுவருகின்றன. இவ்வாண்டு கீழ்வாலையில் உள்ள பாறை ஓவியங்களைப் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்விடத்தில் பெயர்ப்பலகையும் அமைக்கப்பட்டது. சிவகங்கை அரண்மனை, சிறுவயல் மருது பாண்டியர் கோட்டை, அழகர் கோயில் திருமலை நாயக்கர் மண்டபம், கமுதி கோட்டைமேட்டில் உள்ள சேதுபதி கோட்டை, போன்ற இடங்களை பாதுகாக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இந்து சமய அறநிலையத் துறை ஒதுக்கீடு செய்த நிதியினைக் கொண்டு திருவள்ளூர் மாவட்டம், விளக்கணாம்பூண்டி விசாலீஸ்வரர் கோயில், விழுப்புரம் மாவட்டம், உலகாபுரம் சிவன் மற்றும் விஷ்ணு கோயில்கள் திருச்சி மாவட்டம் ஆலம்பாக்கம் கோயில் ஆகிய கோயில்கள் தூய்மை செய்யப்பட்டு, பாதுகாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இவற்றுடன், திருமலைநாயக்கர் அரண்மனை, தரங்கம்பாடி கோட்டை, மனோரா கோபுரம், இராமநாதபுரம் இராமலிங்கவிலாசம், தஞ்சை அரண்மனை சார்ஜா மாடி போன்ற பாதுகாப்புச் சின்னங்களின் கால முறைப் பாதுகாப்புப் பணி மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

| துறை வெளியீடுகள் | ஆசிரியர்/பதிப்பாசிரியர் |
|---|---|
| 1. தொல்லியல் நோக்கில் தமிழகம் | கு. தாமோதரன். |
| 2. Tamilnadu Archaeological Perspective | K. Damodaran |
| 3. New Light on Tamil Art and Culture | K. Damodaran |
| 4. தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள் | கு. தாமோதரன்<br>சு. இராசகோபால்<br>ஆ. பத்மாவதி<br>ஆர். வசந்தகல்யாணி |
| 5. வரலாறும் கலையும் | கு. தாமோதரன் |
| 6. விசுவாமித்திர சுவாமி வாக்கியம் | கு. தாமோதரன்<br>சௌந்தர பாண்டியன் |

DESIGNED & PRINTED BY : SMART FONTS. ✆ : 4928700 / 4926712